# கிறிஸ்தவக் கீர்த்தனைகள்

கிறிஸ்தவக் கீர்த்தனைகள் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள, கிறிஸ்தவ வழிபாட்டிசையின் துவக்கம் பற்றிய வரலாற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்தவ வழிபாட்டிசையின் முதல் வடிவமாக உள்ளது பழைய ஏற்பாட்டில் காணப்படும் தாவீதரசர் தொகுத்து வழங்கியுள்ள 150 ‘சங்கீதங்கள்’ என அறியப்பட்ட திருப்பாடல்கள் தான். தாவீது காலத்திற்கும் முன்னர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்த இசைப்பாரம்பரியத்தின் அடிப்படையில் தான் ‘சங்கீதங்கள்’ அமைந்துள்ளன. இவற்றை எல்லாம் தொகுத்து வழங்கியவர் தாவீது. எனவே தான் இப்பாடல்கள் ‘தாவீதரசர் சங்கீதம்’ என வழங்கப்படுகின்றன. இப்பாடல்களின் மிக முக்கியமான இரண்டு அம்சங்களில் முதலாக வருவது : இவை பொது ஆராதனைக்குரியவை. அதாவது எல்லோரும் சேர்ந்திசைக்கும் இயல்புள்ளவை. இரண்டாவதாக இஸ்ரவேல் மக்களின் இசையின் மூலமான ‘சான்டிங்’ என்றால் எல்லோரும் உரத்த குரலில் பாடும் முறை என்பதாகும். கி.பி.ஆறாம் நூற்றாண்டின் முடிவில் போப் கிரகோரி என்பவர் இந்த சான்ட்டிங் முறைக்குத் திட்டவட்டமான வடிவம் ஒன்றை வழிவகுத்து கிறிஸ்தவ வழிபாட்டிசையின் ஒரே வழிபாட்டு இசைமுறையாக அளிவித்தார். எனவே அன்று முதல் இது ‘கிரகோரியன் சான்ட்டிங்’ (Gregorian தாய் ராகங்களுக்கு இணையானவை ஆகும். சங்கீதங்கள் பல கருப்பொருள்களைக் கொண்டவை. இறைப்புகழ், உதவி, காத்தல் ஆகியவற்றிற்கு மன்றாடல், மன்னிப்புக்கு வேண்டுதல், நன்றி கூறல், அறிவுரைகள் வழங்குதல் ஆகியவையாகும். முக்கியமாக இவை இஸ்ரவேல் இனத்தின் நாட்டங்களையும் உணர்ச்சிகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. கிறிஸ்து இயேசுவின் திருவாழ்விலும் திருப்பணியிலும் சங்கீதங்கள் சிறப்பிடம் பெற்றிருந்தன.

இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இசையும், இசைவழிபாட்டு முறைகளும் முற்றிலும் வேறுபட்டவையாக இருந்து வந்திருக்கின்றன. உபநிஷத்துக்கள் ஏறக்குறைய 5 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தமையாகச் சொல்லப்படுகின்றன. அவை எல்லாம் இசைவடிவிலேயே நினைவில் வைக்கப்பட்டு இன்றுவரையில் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. இந்திய இசையின் மிக முக்கியமான இரணண்டு அம்சங்கள் என்னவென்றால், முதலில் அது இறைவனை வழிபடும் ஒரு கருவி என்பதும் மற்றொன்று அது ஒரு மெலடி (Melody) அதாவது தனி இசை என்பதாகும். கிறிஸ்தவ பாரம்பரியங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட தனி மனித வழிபாட்டின் அடிப்படை இந்திய இசையின் தனித்துவம் ஆகும். 8ஆம் நூற்றாண்டுக்குப் பின் இந்தியாவில், முகமதியர்களின் அரசியல் பிரவேசத்தால், இந்திய இசையில்

இரண்டு முக்கிய பிரிவுகள் ஏற்பட்டன. ஒன்று ஹிந்துஸ்தானி இசை, மற்றொன்று கர்நாடக இசை கரை + நாடு + அகம், அதாவது மூன்று பக்கங்களிலும் கரைகளை உடைய தென்னிந்திய இசைப்பாரம்பரியமே கர்நாடக இசை என வழங்கப்படலாயிற்று. இந்த இசையானது, பல அரிய, நுணுக்கமான, திட்டவட்டமான சட்டதிட்டங்களைக் கொண்டது. இந்த இசை மரபில் கீர்த்தனை என்பது என்னவெனப் பார்ப்போம். கர்நாடக இசையின் அடிப்படையானது இராகம் ஆகும். 'கடகம்' எனப்படும் இராகநிகண்டுகளில் மிக விரிவான விளக்கங்கள் காணப்படுகின்றன. இசையில் பல பிரிவுகள், அதாவது 'உருப்படிகள்' உள்ளன. இவற்றில் முக்கால் பாகத்திற்கும் மேற்பட்டவை க்ருதிகளும், கீர்த்தனைகளுமே ஆகும். அன்னமாச்சாரியார் (1408-1503) என்பவர் முதன் முதலாக, பாடல்களில் பல்லவி சரணம் என்ற வேறுபாடுள்ள பகுதிகளை அறிமுகப் படுத்தினார். பின்னர், வளர்ந்த நிலையில் பல்லவி அனுபல்லவி சரணம் என்ற பகுதிகள் பாடல்களில் இடம்பெற்றன. ''க்ருதிகள்'', ''கீர்த்தனைகள்'' ஆகிய இரண்டிலும் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பகுதிகள் உண்டு. எனினும் க்ருதிகளில் இரண்டு அல்லது மூன்று சரணங்கள் மட்டுமே காணப்படும். கீர்த்தனைகளில் 12 சரணங்கள் கூட வரலாம். எனினும் இவ்விரண்டிற்குமுள்ள மிக முக்கியமான வேறுபாடு அதன் இசை அமைப்பிலாகும். ஒவ்வொரு இசை வடிவத்திலும் 'தாது', 'மாது' என்ற மிக முக்கிய அம்சங்கள் உள்ளன. 'தாது' என்பது இசையின் ஆழத்தையும் 'மாது' என்பது பாடலில் உள்ள பொருளின் ஆழத்தையும் கவிதையையும் குறிக்கும். ''க்ருதிகள்'' மாது என்ற இசை நுணுக்கத்திற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன. கீர்த்தனைகள் தாது என்ற அம்சத்திற்கும் அதாவது அதன் பாடல், பொருள் நுணுக்கம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றன.

எனவேதான் 1853ஆம் ஆண்டு சென்னை கிறிஸ்தவ இலக்கியக் கழகம் சார்பின் அருள்திரு. வெப் அவர்களால் வெளியிடப்பட்ட தமிழ் இசை வழிபாட்டுத் தொகுப்பிற்கு ''கிறிஸ்தவ கீர்த்தனைகள்'' என்று பெயரிடப் பெற்றது. இந்த பெயரின் வழியாக அதாவது கீர்த்தனை என்று பெயரிடப்பட்டதன் மூலமாக, இசையை விட பக்தியும் அதன் பொருளும் முக்கியம் என்பதை குறிப்பதாகவே அமைகிறது. இதுவரை 13 முறை மறுமதிப்பும் பல முறை அச்சிடப்படும் வளர்ந்துள்ளது இந்நூல். ஏறக்குறைய 450 கீர்த்தனைகளைத் கொண்ட இந்த நூல் பல கிறிஸ்தவ சபைகளின் பொதுவான இசை வழிபாட்டு நூலாகவே பயன்பட்டு வருகிறது. இந்நூலின் முதல் பாடலாக திரு.கிருஷ்ணப்பிள்ளை அவர்களின் 'சத்தாய் நிஷ்களமாய்' என்ற பாடல் வருகிறது. இதன் இசையானது 13ம் நூற்றாண்டின் சைவத்திருமுறையில் வரும் ''பொன்னார்மேனியனே'' என்ற பாடலின்

செஞ்சுருட்டி இராகத்தை சேர்ந்ததாகும். இதன் மூன்றாம் பாடல் ‘ஆகமங்கள் புகழ் வேதா நமோ நமோ’ என்ற பாடல் தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியாரால் இயற்றப்பட்டது. இதன் இசை திருப்புகழின் “நாதவிந்துக்கலாபி நமோநம” என்ற பாடலின் இசையாகும். தஞ்சை வேதநாயகம் சாஸ்த்திரியார், மாயூரம் வேதநாயகம்பிள்ளை, கிருஷ்ணப்பிள்ளை, தஞ்சை சத்தியநாதன், ஆபிரகாம் பண்டிதர், ஜான்பால்மர் போன்ற பல மேதைகளின் பாடல்களால் ‘கிறிஸ்தவக் கீர்த்தனைகள்’ என்ற நூல் நிறைந்துள்ளன. இவற்றில் நாம் மிக முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது ஒன்று உண்டென்றால் அது இந்தக் கீர்த்தனைகளின் இசை வடிவம் மிகப்பெரும்பாலான கீர்த்தனைகளின் இசையானது ஏற்கனவே, இந்திய இந்து மத இசை மரபுகளில் புழக்கத்தில் உள்ள பாடல்களின் இசைதான் என்பதே அந்த உண்மையாகும்.

எனவே இன்றைய காலக்கட்டத்தில் நாம் எந்தவகையான பாடல்களை கீர்த்தனைகளைப் பாடுவது? குறைந்தப்பட்சத்தில் திட்டமாகக் கீழ்க்கண்ட ஒழுங்குமுறைகளை எல்லா சபைகளும் பின்பற்றலாம்.

1. நல்ல தமிழில் எழுதப் பெற்று, எல்லோருக்கும் விளங்கும் பொருளுள்ளவை.

2. பக்தியைத் தூண்டுகிற எல்லோரும் சேர்ந்து பாடக்கூடிய இசையமைப்பு.

3. தமிழிசை சார்ந்த, இராகங்கள் அடிப்படையிலமைந்த, எளிய மிக பக்திரசமிக்க இசையமைப்பு.
4. இசைக்கருவிகள், பக்கவாத்தியமாக மட்டும், அதாவது இசைக்கு உதவியாக இருக்க வேண்டும். அவற்றின் ஒலி அளவு குறைவாக பயன்படுத்தப்பட வேண்டும்.

5. ஆர்கன், கீபோர்டு, கிட்டார், ட்ரம்ஸ் போன்ற மேற்கத்திய இசைக்கருவிகளைத் தவிர்த்து தம்புரா, வயலின், மிருதங்கம், தபேலா, குழல் ஆகியவற்றை பயன்படுத்தலாம்.

மேலே கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் அனைத்தையும் நடைமுறைக்கு ஒவ்வாதவை என்று நிராகரிக்கப்பவர்களும் உண்டு. கிறிஸ்தவம் ஒரு மேற்கத்திய இறக்குமதி என்ற கருத்திற்கு முத்திரை குத்தும் முறையாகும் அது. நம் கிறிஸ்துவை நம் இசையில் போற்றிப்பாடுவதன் அனுபவமே வேறு!

அந்த அனுபவம் உள்ளவர்களால் மட்டுமே நான் சொல்வதைப் புரிந்து கொள்ள இயலும்.

பேராசிரியர் எஸ்.எப்.்.என். செல்லையா
Mobile : 98404 22296